THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Tuesday, the 1st September 1970.

The House met in the Council Chamber, Fort. St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Special training courses for teachers

*61. *Q.*—THIRU M. ETHIRAJULU (on behalf of THIRU M. SANKARALINGAMPILLAI): Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the places where and the number of batches in which refresher courses were held for the teachers of our State during the summer holidays in 1969 ;

(*b*) the number of (1) College teachers (2) High School teachers benefited thereby ;

(*c*) the total expenditure incurred ; and

(*d*) the amount borne by the Central Government and the University Grants Commission ; the amount spent by the State Government ?

ஆசிரியர்களுக்கெனச் சிறப்புப் பயிற்சி

திரு. எம். எத்திராஜுலு (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1969 கோடை விடுமுறையில் நம் மாநிலத்தில் ஆசிரியர்களுக்கெனச் சிறப்புப் பயிற்சி எந்தெந்த இடங்களில் எத்தனை பிரிவாக நடைபெற்றது ?

(இ) அதனால் பயன் பெற்ற (1) கல்லூரி ஆசிரியர்கள் (2) உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) இதனால் ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு ?

(எ) மத்திய அரசும், பல்கலைக்கழக மான்யக் குழுவும் ஏற்றுக் கொண்ட தொகை எவ்வளவு ? மாநில அரசு செலவு செய்த தொகை எவ்வளவு ?

[1st September 1970

THE HON. THIRU V.R. NEDUNCHEZHIYAN: (*a*) (*b*), (*c*) and (*d*) : A statement (*) is placed on the table of the House.

திரு. எம். எத்திராஜுலு : மேஜையின் மீது வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையின்படி யுனிவர்சிடி கிராண்ட் கமிஷன் சுமார் ரூ. $5\frac{1}{2}$ லட்சம் கொடுத்திருக்கிறது இத்திட்டத்திற்கு. மத்திய அரசு ஒன்றுமே கொடுக்கவில்லை. ஆனால் தமிழக அரசு மட்டும் ரூ. 93,000 கொடுத்திருக்கிறது. ஆகையால் மத்திய அரசிடம் தமிழக அரசு கொஞ்சம் பணம் அதிகமாகக் கொடுக்கும்படி வற்புறுத்தி மேலும் பல ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : பல்கலைக்கழக மானியக் குழு ரூ. 5,42,305 கொடுத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட அது இந்திய அரசு கொடுத்ததாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்திய அரசின் சார்பாகத்தான் பல்கலைக் கழக மானியக் குழு கொடுத்திருக்கிறது. மாநில அரசு ரூ. 93 ஆயிரம் செலவு செய்திருக்கிறது. அவர்கள் தந்திருப்பதை மகிழ்ச்சியோடு, ஓரளவுக்கு நாம் எதிர்பார்க்கிற தொகை என்ற அளவில்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

திரு. எம். ராஜா அய்யர் : மாநில அரசு ரூ. 93 ஆயிரம் செலவு செய்திருக்கிறது. விஞ்ஞானப் பாடங்களைக் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் தமிழில் போதிப்பதற்குப் பயிற்றுவிக்க இது வழி செய்திருக்கிறது. இப்போது நமது கல்லூரிகளில் இருக்கிற எல்லா விரிவுரையாளர்களும் இந்தப் பயிற்சியைப் பெற்றுவிட்டார்களா ? இன்னும் இந்தப் பயிற்சி நீடிக்க வேண்டியிருக்கிறதா ? இன்னும் அதற்காகப் பணம் செலவிட வேண்டியதிருக்கிறதா ? அல்லது இந்தத் திட்டம் பூர்த்தியாகிவிட்டதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : எல்லோரும் இந்தப் பயிற்சியைப் பெற்றுவிட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. சென்ற ஆண்டு ஒரு சிலருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த ஆண்டும் ஒரு சில ஆசிரியர்கள் பயிற்சி பெற்றார்கள். அடுத்த ஆண்டில் மீதம் உள்ளவர்களுக்கு இதே வகையில் பயிற்சி அளிக்கும் முறை இருக்கும்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : விஞ்ஞானத்தைத் தமிழில் சொல்லிக் கொடுப்பதற்காக நியமிக்கப்படக் கூடிய பயிற்சியாளர்களுடைய தகுதி என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஏற்கனவே இந்தத் துறையில் பேராசிரியர்களாக இருந்தவர்கள், இதுபற்றிய பல புத்தகங்களை எழுதியவர்கள், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருப்பவர்கள், வல்லுனர்களாக இருப்பவர்களைக் கொண்டுதான் இந்தப்பயிற்சி அளிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட எல்லா ஆசிரியர்களும் ஓரேவிதமான சொற்களை பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, எந்தெந்த வகையில் அந்தச்சொற்களைப் பயன்படுத்தலாம் என்று தேர்ச்சி பெறுவதற்காக, இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(*)Printed as Appendix